# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

**நிலையறிபரீட்சை – 2021**

## குடியியற்கல்வி –I,II

| பெயர் ∴ சுட்டெண் :- ..................... | தரம் :- 9 | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

1. “ இலவச மண்ணில் இலவச ஊழியம் ” என்பதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி யார்?
   (1) டொனால்ட்ரம்ப்
   (2) ஜோர்ஜ் வோஷிங்டன்
   (3) ஆபிரகாம் லிங்கன்
   (4) ஜோன் எவ் கெனடி

2. சமூகப் பாதுகாப்பிற்காகக் குடும்பத்தினால் ஆற்றப்பட வேண்டிய பணிகளில் ஒன்று எது?
   (1) முறையான கல்வியைப் பெற்றுக் கொள்ளல்
   (2) சமூகநலன்புரிச் சேவைகளை நடாத்திச் செல்லுதல்
   (3) இனங்களுக்கிடையில் சகவாழ்வை ஏற்படுத்தல்
   (4) சமூக இசைவாக்கம் அடைவதற்கான அடிப்படைப் பயிற்சியை வழங்குதல்

3. சமயங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டமையால் “பன்சலையின் பிதா”எனச் சிறப்பிக்கப்படுபவர் யார்?
   (1) வண.பிதா.மர்சலின் ஜயகொடி
   (2) 2) அநாகரிகதர்மபாலா
   (3) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
   (4) ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட்

4. பின்வருவனவற்றுள் தேசியசட்டம் அல்லாதது எது?
   (1) குற்றவியல் சட்டம்
   (2) குடியியல் சட்டம்
   (3) குடிவரவு,குடியகல்வு சட்டம்
   (4) அரசியலமைப்புச் சட்டம்

5. அரசாங்கத்தின் சட்டம் தொடர்பான சகல செயற்பாடுகளுக்கும் பொறுப்பாக இருக்கும் திணைக்களம் எது?
   (1) பொலிஸ் திணைக்களம்
   (2) மதுவரித் திணைக்களம்
   (3) குற்றவியல் விசாரணைத் திணைக்களம்
   (4) சட்டமாஅதிபர் திணைக்களம்

6. பிரச்சினையொன்றை இணக்கசபைக்குக் கொண்டு செல்வதற்கான வழிமுறைகளில் பொருத்தமற்றது எது?
   (1) மாவட்டச் செயலர் மூலம்
   (2) பொலிஸ் மூலம்
   (3) நீதிமன்றம் மூலம்
   (4) தனிப்பட்டோர் சபை மூலம்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



7. சிறுவர் துன்புறுத்தல், துஸ்பிரயோகம் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கான தொலைபேசி இலக்கம் எது?
   (1) 1993
   (2) 1929
   (3) 119
   (4) 110

8. தொழினுட்ப கண்டுபிடிப்புக்கள், உற்பத்திகள் உருவாவதில் செல்வாக்குச் செலுத்திய பிரதான காரணி யாது?
   (1) பசுமைப்புரட்சி
   (2) கைத்தொழிற்புரட்சி
   (3) நீலப்புரட்சி
   (4) வெண்மைப்புரட்சி

9. பொருத்தமான தொழினுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்படும் விளைவு அல்லாதது எது?
   (1) வளங்கள் அழிவடைதல் தடுக்கப்படுதல்
   (2) நாட்டில் பொருளாதாரவளர்ச்சி ஏற்படல்
   (3) மனிதவளத்திலிருந்துஉச்சப்பயனைப் பெறல்
   (4) சூழல் சமநிலைசீர்குலைதல்

10. மனிதர்களது தேவைகளை நிறைவு செய்யும் வகையில் வளங்களை மாற்றியமைக்கும் செயற்பாடு எது?
   (1) பங்கீடு
   (2) நுகர்வு
   (3) உற்பத்தி
   (4) ஏற்றுமதி

11. புதிய முன்னேற்றங்கள் காரணமாக தொழிற்சந்தையில் சேவைத்துறைசார்ந்து உருவாகியுள்ள புதிய வேலைவாய்ப்பு யாது?
   (1) புகைப்படக் கருவி இயக்குனர்
   (2) நனோ தொழினுட்பவல்லுனர்
   (3) மனை அலங்காரப் பணியாளர்
   (4) மென் தொழினுட்பவல்லுனர்

12. நல்வாழ்விற்கான பண்புகளைக் கொண்ட விடையைத் தெரிக
   (1) நன்றிமறவாமை, பொறாமை
   (2) திருப்தியின்மை, சூழலை நேசித்தல்
   (3) சட்டத்தைமதித்தல், ஆடம்பரவாழ்க்கை
   (4) நல்லிணக்கம், மகிழ்ச்சியுடன் வாழ்தல்

13. கூட்டுறவு இயக்கத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
   (1) ஏ.ஈகுணசிங்க
   (2) ரொபாட் ஓவன்
   (3) பேடன் பவல்
   (4) டி.எஸ்.சேனநாயக்க

14. கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்துவம் பெறுவதற்கான வயதெல்லை யாது?
   (1) 14 வயது
   (2) 18 வயது
   (3) 21 வயது
   (4) 25 வயது



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



15. சுமோ விளையாட்டைத் தேசிய விளையாட்டாகக் கொண்ட நாடு எது?
    (1) இந்தியா
    (2) சீனா
    (3) யப்பான்
    (4) தாய்வான்

16. "சனநாயகம் அனைவருக்கும் உரிமைகளைப் பெற்றுத் தரும் ஆட்சிமுறை"எனக் கூறியவர் யார்?
    (1) ஆபிரகாம் லிங்கன்
    (2) எட்மன்ட் பர்க்
    (3) மொரிஸ் டுவைஜர்
    (4) சீலர்

17. கிரேக்கத்தில் எதன்ஸ் நகர அரசில் நிலவிய ஆட்சிமுறை எது?
    (1) பிரதிநிதித்துவசனநாயகம்
    (2) மறைமுகசனநாயகம்
    (3) நேரடிசனநாயகம்
    (4) ஏகாதிபத்தியஆட்சிமுறை

18. இருகட்சிமுறை நிலவுகின்ற நாடுகளைக் கொண்ட விடை எது?
    (1) இலங்கை,பிரித்தானியா
    (2) ஐக்கியஅமெரிக்கா,ஐக்கிய இராச்சியம்
    (3) பாகிஸ்தான், ரஷ்யா
    (4) சீனா, இந்தியா

19. இலங்கையருக்கு வரையறுக்கப்பட்ட வாக்குரிமை மற்றும் சர்வஜன வாக்குரிமையை வழங்கிய அரசியல் யாப்புக்களை முறையே விடையாகக் கொண்டது எது?
    (1) முதலாம் குடியரசுயாப்பு, இரண்டாம் குடியரசுயாப்பு
    (2) சோல்பரியாப்பு,கோல்புறூக் யாப்பு
    (3) குறூ மக்கலம் யாப்பு,டொனமூர் யாப்பு
    (4) மனிங் யாப்பு,சோல்பரியாப்பு

20. நிலையுறுதியான தன்மையைக் கட்டியெழுப்புவதற்கு தனிநபர் வளர்த்துக் கொள்ளவேண்டிய பண்புகளை உள்ளடக்கிய விடை யாது?
    (1) நியாயத்தைமதித்தல்
    (2) நேர்மையற்றதன்மை
    (3) உணர்ச்சிவசப்படல்
    (4) அநீதியைமதித்தல்

## பகுதிII

**விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01.1) சமூகப்பாதுகாப்புடன் தொடர்புடைய நிறுவனங்கள் நான்கு குறிப்பிடுக? (02புள்ளிகள்)
2) சமூக விரோதச் செயல்களைத் தடுத்தல் மற்றும் சமூகப்பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற அரச நிறுவனங்கள் மூன்றைப் பெயரிடுக? (03புள்ளிகள்)
3) சமூகப்பாதுகாப்பிற்காக பாடசாலைகள் ஆற்றுகின்ற பணிகள் மூன்று எழுதுக? (03புள்ளிகள்)
4) இலங்கைப் பொலிசார் சமூகப்பாதுகாப்பிற்காக வழங்குகின்ற சேவைகள் நான்கு குறிப்பிடுக? (04புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



02. 1) சட்டத்தின் மூலாதாரங்கள் நான்கு குறிப்பிடுக? (02புள்ளிகள்)
2) சட்டத்தின் பண்புகள் மூன்று தருக? (03புள்ளிகள்)
3) கீழேதரப்பட்டுள்ள முப்படைகளுக்குரிய மகுடவாசகங்களை எழுதுக?
a. இலங்கை இராணுவப்படை -
b. இலங்கைக் கடற்படை -
c. இலங்கைவிமானப்படை - (03புள்ளிகள்)
4) நீதிமன்றம் தொடர்பாக தனிநபர் ஒருவருக்குள்ள பொறுப்புக்கள், கடமைகள் நான்கு குறிப்பிடுக? (04புள்ளிகள்)

03. 1) மனிதன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்ற சந்தர்ப்பங்கள் இரண்டு குறிப்பிடுக? (02புள்ளிகள்)
2) மனித வாழ்க்கையில் தொழில்நுட்பமாற்றம் ஏற்படுத்தியுள்ள சாதக விளைவுகள் மூன்று தருக? (03புள்ளிகள்)
3) நவீன தொழில்நுட்பப்பிரயோகத்தின் விளைவாகக் கைத்தொழிற்துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மூன்று குறிப்பிடுக? (03புள்ளிகள்)
4) தனிநபர் மற்றும் சமூகத்தின் மீது பொருளாதார மாற்றங்கள் ஏற்படுத்துகின்ற தாக்கங்கள் நான்கு எழுதுக? (04புள்ளிகள்)

04. 1) தொழிற்சந்தையின் இரு வகைகளையும் குறிப்பிடுக? (02புள்ளிகள்)
2) நல்வாழ்விற்கானநெறிமுறைதவறுவதனால் ஏற்படுகின்றபாதகவிளைவுகள் மூன்று எழுதுக? (03புள்ளிகள்)
3) கூட்டுறவு இயக்கத்தின் நோக்கங்கள் மூன்றுதருக? (03புள்ளிகள்)
4) பூகோளரீதியில் சகவாழ்வினைமேற்கொள்ளவேண்டியதற்கானநான்குகாரணங்களைக் குறிப்பிடுக? (04புள்ளிகள்)

05. 1) பிரதிநிதித்துவசனநாயகம் நிலவுகின்றநாடுகள் நான்குகுறிப்பிடுக? (02புள்ளிகள்)
2) இன்றுநேரடிசனநாயகஆட்சிமுறையைநடைமுறைப்படுத்துவதில் காணப்படுகின்ற தடைகள் மூன்றுஎழுதுக? (03புள்ளிகள்)
3) பிரதிநிதித்துவசனநாயகத்தின் அடிப்படைப்பண்புகள் மூன்றுதருக? (03புள்ளிகள்)
4) சனநாயகசமூகத்தில் வாழ்கின்றபிரசைஒருவருக்குள்ளஉரிமைகள் நான்கு குறிப்பிடுக? (04புள்ளிகள்)

06. 1) இலங்கையில் நடைபெறுகின்றதேர்தல்கள் இரண்டினைப் பெயரிடுக? (02புள்ளிகள்)
2) 1978 ஆம் ஆண்டுஅரசியல் யாப்பின் படிவாக்குரிமை இல்லாமற் போவதற்கான காரணங்கள் மூன்றுஎழுதுக? (03புள்ளிகள்)
3) அரசியல் கட்சிஒன்றினால் முன்னெடுக்கப்படுகின்றபணிகள் மூன்றுதருக? (03புள்ளிகள்)
4) தேர்தல்கள் தொடர்பாகபிரசைகளுக்குரியகடமைகள் நான்குதருக? (04புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk